இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு

1876 – 2026

150 ஆண்டுகள்

# பாதுகாவலன்

# PAATHUKAVALAN

Registered in the Department of Post of Sri Lanka No. QD/119/News/2020. Founded 19 Feb.1876

St.Joseph's Catholic Press, 360 Main Street, Jaffna, Sri Lanka. Tel: 021 - 222 2378 | Fax: 021 - 222 9041 | E-mail: editorkavalan@gmail.com, ISSN 1391-7633

மலர் : 150 | இதழ் : 12 | திகதி :04.10.2026 | விலை : 50.00

## உலக அமைதிக்காகக் குழந்தைகளுடன் ஜெபமாலை செபித்தார் திருத்தந்தை!

### உலகின் அனைத்துக் குழந்தைகளுக்காகவும் அமைதிக்காகவும் செபிக்குமாறு குழந்தைகளுக்குத் - திருத்தந்தை அழைப்பு

உலக அமைதிக்காகவும், போர் மற்றும் துன்பங்களால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்காகவும், ஏறத்தாழ 1,300 பேர், அவர்களில் 700 குழந்தைகள், திருத்தந்தை அவர்களுடன் இணைந்து ஜெபமாலை செபித்தனர். கடந்து ஒக்டோபர் 1ஆம் திகதி வத்திக்கான் தோட்டத்தில் அமைந்துள்ள லூர்து அன்னை கெபியில் நடைபெற்ற இந்த செபமாலைச் செபம், தேவையில் இருக்கும் திருஅவைக்கு உதவும் அமைப்பான Aid to the Church in Need முன்னெடுக்கும் "ஒரு மில்லியன் குழந்தைகள் ஜெபமாலை செபிக்கின்றனர்" என்ற முயற்சியின் ஒரு பகுதியாக இடம்பெற்றது. இத்தொடர் முயற்சி 1 முதல் 7ஆம் நாள் வரை நடைபெறுகிறது. இந்நிலையில், உக்ரைன், லெபனான், சிரியா, புனித பூமி, தெற்கு சூடான் உள்ளிட்ட போர் மற்றும் துன்பங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வாழும் குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்காகவும், துன்புறுத்தல்களை எதிர்கொள்ளும் கிறிஸ்தவர்களுக்காகவும் சிறப்பாகச் செபங்கள் எழுப்பப்பட்டன. இத்தாலியம், ஸ்பானியம், உருது, ஜெர்மன் மற்றும் அரபு ஆகிய ஐந்து மொழிகளில் ஜெபமாலை செபிக்கப்பட்டது. இது உலகின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த குழந்தைகளின் ஒன்றிப்பை வெளிப்படுத்தியது.

உலகின் அனைத்துக் குழந்தைகளுக்காகவும் அமைதிக்காகச் செபிக்குமாறு குழந்தைகளுக்கு அழைப்பு விடுத்த திருத்தந்தை, குறிப்பாகப் போர் நடைபெறும் நாடுகளில் வாழும் குழந்தைகளை நினைவுகூர்ந்து செபிக்குமாறு கேட்டுக்கொண்டார். குழந்தைகளின் செபங்களுக்கு இறைவனின் இதயத்தில் தனிச்சிறப்பான இடம் உண்டு என்று கர்தினால் கூட் கோச் அவர்கள் தெரிவித்தார். அன்னை மரியாவுடன் இணைந்து உலகின் துன்பங்களை இயேசுவிடம் கொண்டு செல்ல முடியும் என்பதைக் குழந்தைகள் உணர வேண்டும் என்றும் அவர் கூறினார். ஜெபமாலை எளிமையான செபமாக இருந்தாலும், அனைவரும் அதை இறைவனுக்கு அர்ப்பணிக்க முடியும் என்று கூறிய திருத்தந்தை, இயேசுவின் வாழ்வில் இடம்பெற்ற ➡ ப. 2



## உருத்திரபுரம், கோணாவில், தர்மபுரம் பகுதிகளுக்கு யாழ். ஆயர் விஜயம்



யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் அவர்கள், கடந்த 30ஆம் திகதி உருத்திரபுரம், கோணாவில் மற்றும் தர்மபுரம் பகுதிகளுக்கு விஜயம் செய்து, அருட்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளைச் சந்தித்து, அப்பகுதி மக்களின் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

உருத்திரபுரம் பங்கில், பங்குத்தந்தை அருட்தந்தை ஜோண் கனிசியஸ் அவர்களைச் சந்தித்த ஆயர், பங்கின் மேய்ப்புப்பணித் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடினார். தொடர்ந்து, திருக்குடும்ப அருட்சகோதரிகளைச் சந்தித்து, அவர்களின் பணிகள் குறித்தும் கலந்துரையாடினார்.

பின்னர், அருட்தந்தை ஜோன் கனிசியஸ் மற்றும் திருக்குடும்ப அருட்சகோதரிகளுடன் கோணாவில் ஆலயத்திற்கு ➡ ப. 2

## புனித மிக்கேல் ஆலய வருடாந்தத்திருவிழா



உரும்பிராய் புனித மிக்கேல் ஆலய வருடாந்தத்திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அகஸ்ரின் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 29ஆம் திகதி நடைபெற்றது. 20ஆம் திகதி கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகி 28ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது.

திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர். திருவிழாத் திருப்பலி நிறைவில் புதிதாக அமைக்கப்படவுள்ள பங்குப் பணிமனைக்கான அடிக்கல்லும் ஆயர் அவர்களால் நாட்டிவைக்கப்பட்டது.

## போதனா வைத்தியசாலை சிற்றாலய வருடாந்தத் திருவிழா



யாழ். போதனா வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள புனித ஆரோக்கிய அன்னை சிற்றாலய வருடாந்தத் திருவிழா வைத்தியசாலை ஆன்மீக இயக்குநர் அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை டினுசன் பியூமால் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. 24ஆம் திகதி கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகி 26ஆம் திகதி நற்கருணைவிழா இடம்பெற்றது. திருவிழாத் திருப்பலியை யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை குருமுதல்வர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

## செயற்கை நுண்ணறிவுக் காலத்தில் திருஅவைக்குக் கலைஞர்கள் தேவை




தேடல் இயந்திரங்கள் மற்றும் செயற்கை நுண்ணறிவு ஆதிக்கம் செலுத்தும் இக்காலத்தில், திருஅவைக்கும் கலைஞர்களுக்கும் இடையிலான உறவைப்புதுப்பிக்க வேண்டியதன் அவசியத்தை திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் வலியுறுத்தினார். "சாத்தியக் கூறுகளின் கலை: ஒன்றிணைந்து நெய்தல்" என்ற தலைப்பில், கலாசாரம் மற்றும் கல்விக்கான திருப்பீடத்துறை ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் பங்கேற்ற கலைஞர்களிடம் உரையாற்றியபோது இவ்வாறு மொழிந்த திருத்தந்தை, கலை, ஒரே மாதிரியான சிந்தனைகளுக்கு எதிராக நின்று, பார்வையை ஆழப்படுத்தி, நம்மைச் சற்று நின்று சிந்திக்கத் தூண்டுவதன் வழியாக, "கலாசார மற்றும் ஆன்மீகப் புத்துயிரூட்டலின் ஒரு வடிவமாக" மாற முடியும் என்று கூறினார். உண்மையான கலை மனித இதயத்தின் ஆழமான ➡ ப. 2

## 'செயற்கைக் கருத்தரித்தல் குறித்த, ஆங்கிலம் பேசும் உலகின், உயிரியல் அறநெறிச் சிந்தனைகளும் அறநெறி வாதங்களும்" நூல் வெளியீடு




யாழ். மறைமாவட்ட குருவும் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர்குருத்துவக் கல்லூரி விரிவுரையாளருமான அருட்கலாநிதி தே.ரவிராஜ் அவர்களின் "செயற்கைக் கருத்தரித்தல் குறித்த, ஆங்கிலம் பேசும் உலகின், உயிரியல் அறநெறிச் சிந்தனைகளும் அறநெறி வாதங்களும்" "Ethical Argumentations of English Speaking Bio-ethical Thoughts of In Vitro Fertilization" நூல் வெளியீட்டு நிகழ்வு, 5ஆம் திகதி அகவொளி குடும்ப நல நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர்குருத்துவக் கல்லூரி விரிவுரையாளர் அருட்தந்தை ஜேம்ஸ்நாதன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், யாழ். மறைமாவட்ட ஓய்வுநிலை ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் ஞானப்பிரகாசம் ➡ ப. 2

ஆண்டவர் நகரைக் காக்கவில்லையெனில், காவலர்கள் விழித்திருப்பதும் வீணாகும். (தி.பா : 127:1)

முப்பொன் விழா

## எமது எண்ணம்

# செபமாலை அன்னை நிகரில்லாக் கருணைக் கடல்!

**அரவின் உருவொடு கடிவிடு விடம்அற, அரிதில் உயிர்தரும் இனிது அமுது இவள் என, இரவின் இருளினும் வடுதரும் இருள்அற. இரவி ஒளியினும் ஒளிர்சுடர் இவள்என. உரம் இழிவுஅற, உயிர்அடும் இகல்அற. உறுதி இவள்என, உயிர் இவள்என, விரி புரவில் நிகர்இல தயவினில் நிகர்இல புணரி இவள்என அறைகுவர் சிலருமே!" (தேம்பாவணி, படலம் 8: 66)**

என்கிறது வீரமாமுனிவர் இயற்றிய தேம்பாவணி. அன்னை மரியாயின் தூய்மையையும் தாய்மையையும், இறைவன் அவருக்கு அருளிய ஒப்பற்ற மேன்மையையும் போற்றும் இப்பாடல் வரிகளில், பாம்பின் வடிவில் வந்த தீயோன் (அலகை) மனித குலத்தின் மீது உமிழ்ந்த பாவம் என்னும் கொடிய நச்சு அகன்று, ஆன்மாவிற்கு மறுவாழ்வு அளிக்கும் இனிய அமிழ்தமாக அன்னை மரியா திகழ்கிறார் என்றும், இரவின் இருளைக் காட்டிலும் கொடிய அறியாமை என்னும் இருளைப் போக்கும் சூரியனைவிட, பேரொளி வீசும் சுடராக அவர் விளங்குகிறார் என்றும் குறிப்பிடுகிறார். மேலும், மனத்தின் பலவீனங்களையும், ஆன்மாவைக் கொல்லும் பாவப் பகையையும் அழித்து நல்வாழ்விற்கு உறுதியளிக்கும் உயிராக அவர் இருக்கிறார் என்றும், அளவற்ற உலக உயிர்களைக் காப்பதிலும், இரக்கம் காட்டுவதிலும் தனக்கு நிகரில்லாத கருணைக் கடலாக அன்னை மரியா விளங்குகிறார் என்று சான்றோர் அவரைப் போற்றுகின்றனர் என்றும் வானவர் புகழ்வதாக வடித்துள்ளார்.

அன்னை மரியாவின் கைகளில் தவழும் செபமாலை வெறும் செபங்களின் தொகுப்பு மட்டுமல்ல: மாறாக, அது ஆன்ம மீட்பிற்கும், தீமைகளை வெல்வதற்கும், இறையரு ளைப் பெறுவதற்கும் நமக்கு அன்னையால் வழங்கப்பட்ட ஆற்றல்மிக்க ஆன்மிகக் கருவி. செபமாலையின் ஒவ்வொரு மணி வழியாகவும் நாம் அன்னையை நோக்கி "அருள் நிறைந்த மரியே வாழ்க" என்று போற்றும்போது, அன்னை நமக்குத் தேவையான அருள் நிறைந்த நம்பிக்கையைக் கற்றுத் தருகிறார்: தனது மகனிடமிருந்து மன அமைதியையும், ஆன்மிகப் பலத்தையும் பெற்றுத் தருகிறார்.

கிறித்தவ வாழ்வியலில் செபமாலை இறைவேண்டல் என்பது, இயேசுவின் மீட்பு மறைபொருள்களை அன்னை மரியாவோடு இணைந்து தியானிக்கும் ஒரு புனிதப் பயண மாகும். இப்பயணத்தில், நமக்கு நன்மை செய்வதற்கு அன்னை மரியா ஒருபோதும் தயங்குவதில்லை என்பதை உணர்த்துவதே கானாவூரில நிகழ்ந்த முதல் அருளடையாளம். அதேபோன்று, இன்றும் தன் பிள்ளைகள் நம்பிக்கையோடு செபமாலையைக் கையிலெடுத்து மன்றாடும் போது, தன் அன்பு மகன் இயேசுவிடம் நமது தேவைகளுக்காக இடைவிடாது பரிந்துபேசி அளவற்ற அருள்கொடைகளை அருள்கின்றார்.

தங்கள் துயரங்கள் மற்றும் தேவைகளுக்காக அன்னையை நாடிவரும் பிள்ளைகளை, அன்னை மரியா ஒருபோ தும் இங்கு வெறுங்கையோடு திருப்பி அனுப்புவதில்லை என்பது கண்கூடு.

திருதந்தையின் வேண்டுதலுக்கமைய ஒக்டோபர் மாதத்தில் எம் சிறார்களை செபமாலை பக்தி தியானத்தில் செபிக்க கற்றுக்கொடுத்து உலக அமைதிக்காகவும் போரினால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்காகவும் குடும்ப ஒற்றுமைக்காகவும் செபிக்க கற்றுக்கொடுப்போம்.

**அருட்பணி. எஸ்.எயின்சிலி றொஷான்**

# சிறார்கள் உலக அமைதிக்காக ஒரு மில்லியன் செபமாலை செபிக்க யாழ்.ஆயர் அழைப்பு

போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்காகவும், உலக அமைதி மற்றும் ஒற்றுமைக்காகவும் செபமாலை ஒப்புக்கொடுக்குமாறு அழைப்பு திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் அழைப்பிற்கமைய, உலக அமைதி, திருஅவையின் நலன் மற்றும் போரினால் பாதிப்புற்ற சிறுவர்களுக்காக முன்னெடுக்கப்படும் ஒரு மில்லியன் செபமாலை முயற்சியில் யாழ்ப்பாண மறைமாவட்டமும் இணைந்து செயற்படுமாறு யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர் மேதகு பி.அன்ரன் ரஞ்சித் ஆண்டகை அழைப்பு விடுத்துள்ளார்.

ஒக்டோபர் 1ஆம் திகதி வத்திக்கானில் திருத்தந்தையுடன் ஆரம்பிக்கப்பட்ட இச்செப முயற்சியில், உலகெங்குமுள்ள மறைமாவட்டங்களும் பங்குகளும் இணைந்து செபமாலை ஒப்புக்கொடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள், பெற்றோரை இழந்த அனாதைச் சிறுவர்கள், உலக அமைதி, நாடுகளுக்கிடையிலான ஒற்றுமை, குடும்பங்களின் நல்லிணக்கம் மற்றும் இலங்கையில் நிலையான சமாதானம் ஆகியவற்றுக்காகச் செபிக்குமாறு ஆயர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கமைய, யாழ்ப்பாண மறைமாவட்டத்தின் அனைத்து பங்குத்தந்தையர்களும் மறைக்கோட்ட முதல்வர்களும் இம்மாதத்தில் தத்தமது பங்கு மற்றும் மறைக்கோட்ட மட்டங்களில் சிறுவர்களை முன்னிலைப்படுத்தி செபமாலைப் பவனிகளையும் சிறப்பு சங்கிலித் தொடர் செபமாலைத் தியானங்களையும் ஏற்பாடு செய்யுமாறு ஆயர் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்நிகழ்வுகளில் குருமுதல்வர், ஆயர் மற்றும் மறைக்கோட்ட முதல்வர் ஆகியோர் தமது வசதிக்கேற்ப பங்கேற்கவுள்ளனர். சிறுவர்களின் விசுவாச வாழ்வை ஊக்குவிப்பதோடு, உலக அமைதி, ஒற்றுமை மற்றும் போரினால் துன்புறும் மக்களுக்கான அக்கறையை அவர்களிடையே வளர்ப்பதே இம்முயற்சியின் நோக்கமாகும்.

எனவே, பங்குத்தந்தையர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் இறைமக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இச்செபமாலை முயற்சியில் பங்கேற்று, அன்னை மரியாவின் பரிந்துரையால் உலகில் அமைதியும் ஒற்றுமையும் நிலவவும், போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு ஆறுதலும் பாதுகாப்பும் கிடைக்கவும், இலங்கையில் நல்லிணக்கமும் சமாதானமும் மலரவும் செபிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

# திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான தொடர்பயிற்சி

திருப்பாலத்துவ சபையில் பயிற்றுவிக்கப்பட்ட ஏற்கனவே சின்னங்கள் பெற்ற ஊக்குவிப்பாளர்களுக்கான தொடர் உருவாக்கல் பயிற்சி எதிர்வரும் 16, 17, 18 ஆம் திகதிகளில் காலி மறைக்கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நிகழ்வில் மறைமாவட்ட இயக்குநருடன் ஒவ்வொரு மறைக்கோட்டத்தில் இருந்தும் பயிற்றுவிக்கப்பட்ட ஓர் ஊக்குவிப்பாளர் பங்கேற்கவுள்ளனர்.

இவ்வாண்டு மறைபரப்பு சபையின் நூற்றாண்டாக அமைவதால் திருத்தந்தையின் மறைபரப்பு சபைகளின் முக்கியத்துவம் அச்சபைகளில் இணைந்து பணியாற்றுவதன் முக்கியத்துவம் என்பன இக்கருத்தமர்வில் மையப்பொருளாக அமையும். பயிற்சி பெறும் ஊக்குவிப்பாளர்கள் தமது மறைக்கோட்டங்களில் பணியாற்றும் ஏனைய ஊக்குவிப்பாளர்களுக்கு தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பாதுகாவலன் விவிலிய நாட்குறிப்பேடு 2027 பிரதிகள் தேவைப்படுவோர் பங்குத்தந்தை மூலம் தொடர்புகொள்ளவும். (விலை 600.00)**
**-ஆசிரியர்-**

## செயற்கை நுண்ணறிவுக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கேள்விகளுக்குப் பதிலளிப்பதாகவும், உண்மை, அழகு, நீதி, அமைதி மற்றும் வாழ்வின் பொருள் குறித்த மனிதர்களின் தேடலை வெளிப்படுத்துவதாகவும் குறிப்பிட்ட திருத்தந்தை, திருஅவையைப் பொறுத்தவரை கலை என்பது வெறும் துணை அம்சம் அல்ல மாறாக, "கேட்பதற்கான ஒரு முக்கியமான தளமாக" உள்ளது என்று வலியுறுத்தினார்.

செயற்கை நுண்ணறிவு வளர்ந்து வரும் இக்காலத்தில், மனிதர்களால் உருவாக்கப்படும் கலையையும் இயந்திரங்களால் உருவாக்கப்படும் படைப்புகளையும் வேறுபடுத்திப் பார்ப்பது அவசரத் தேவையாகியுள்ளது என்று திருத்தந்தை கூறினார்.

மனிதக் கலைக்கும், ஏற்கெனவே உருவாக்கப்பட்ட கோடிக்கணக்கான படங்களை அடிப்படையாகக் கொண்டு புள்ளிவிவரக் கணக்கீடுகள் மூலம் இயந்திரங்கள் உருவாக்கும் படைப்புகளுக்கும் அடிப்படையான வேறுபாடு உள்ளது என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.

இறுதியாக, நற்செய்தியையும் ஆன்மீக உலகையும் மக்கள் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் எடுத்துரைப்பதற்கு கலைஞர்கள் திருஅவைக்கு தேவைப்படுகின்றனர் என்று கூறிய திருத்தந்தை, கலைஞர்கள் மற்றும் கலாசார நிறுவனங்களுடனான தனது கூட்டுறவைப் புதுப்பிக்க திருஅவை விரும்புகிறது என்றும் தெரிவித்து தனது உரையை நிறைவு செய்தார்.

## உலக அமைதிக்காக ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

முக்கிய நிகழ்வுகளை நினைவுகூர்ந்து செபிக்குமாறு குழந்தைகளை ஊக்குவித்தார். உலகம் முழுவதும் இலட்சக்கணக்கான குழந்தைகள் இம்முயற்சியில் இணைந்து செபிப்பதன் வழியாக, அனைத்து மக்களையும் நாடுகளையும் ஒன்றிணைக்கும் "ஒரே மாபெரும் ஜெபமாலை" உருவாகிறது என்று திருத்தந்தை குறிப்பிட்டார். இறுதியாக செபத்துடன் நற்செயல்களையும் அன்பின் செயல்களையும் இணைக்க வேண்டும் என்றும், அதன் வழியாகவே அமைதி வளர்கிறது என்றும் திருத்தந்தை வலியுறுத்தினார்.

## செயற்கை கருத்தரித்தல் குறித்த ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் கலந்து நூலை வெளியிட்டு வைக்க, நூலுக்கான ஆய்வுரையை மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் வழங்கினார்.

யாழ்.மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை பி.அன்ரன் ரஞ்சித் அவர்கள் பிரதம விருந்தினராகவும், கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் இறையியல் நிறுவக இயக்குனர் அருட்தந்தை ஜோசப்தாஸ் ஜெபரட்ணம் மற்றும் கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை பெற்றாஸ் தயாபரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிறி சற்குணராஜா அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்து சிறப்பித்த இந்நிகழ்வில் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள், குருமட மாணவர்கள், இறைமக்களென பலரும் கலந்துகொண்டனர்.

செயற்கை கருத்தரித்தல் பற்றிய கிறிஸ்தவ அறநெறிப் பார்வை தொடர்பான விடயங்களை உள்ளடக்கியதாக இந்நூல் அமைந்துள்ளது.

## உருத்திரபுரம்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயம் செய்த ஆயர், ஆலயத்தின் தேவைகள் மற்றும் அப்பகுதி மக்களின் தேவைகள் தொடர்பில் கலந்துரையாடினார்.

இதனைத் தொடர்ந்து, ஆரோபணம் சிறுவர் இல்லத்திற்கும் விஜயம் செய்த ஆயர், இல்லத்தின் இயக்குநரை சந்தித்து, இல்லத்தின் தேவைகள் மற்றும் சிறார்களின் நலன் தொடர்பில் கலந்துரையாடினார்.

பின்னர் தர்மபுரத்திற்கு விஜயம் செய்த ஆயர், பங்குத்தந்தை அருட்தந்தை றேமன்ட் றெனால்ட் அவர்களை சந்தித்து, பங்கின் விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

தொடர்ந்து, அருட்தந்தை றெனால்ட் அவர்களுடன் அங்கு பணியாற்றும் வியாகுல அன்னை மரியின் ஊழியர் சபை அருட்சகோதரிகளை சந்தித்து, அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை கேட்டறிந்ததுடன், அவர்களின் அர்ப்பணிப்பான பணியைத் தொடர்ந்து முன்னெடுக்க ஊக்கமளித்தார்.

# சிறிய கைகளில் செபமாலை, உலகிற்கோர் அமைதியின் அழைப்பு

**பத்து இலட்சம் குழந்தைகளுடன் உலக அமைதிக்காகச் செபிக்க அழைக்கும் திருத்தந்தை பதினான்காம் லியோ**

உலகம் போர், வன்முறை, அச்சம் ஆகியவற்றால் காயமடைந்திருக்கிறது. இந்த நேரத்தில் திருத்தந்தை பதினான்காம் லியோ ஒரு எளிய ஆனால் வலிமையான அழைப்பை விடுத்துள்ளார்: "**செபமாலையை எடுத்துக்கொள்ளுங்கள் அமைதிக்காகச் செபியுங்கள்**" அக்டோபர் மாதத்தை முன்னிட்டு, உலகெங்கும் உள்ள குடும்பங்கள், குழந்தைகள், பங்குகள் மற்றும் கிறிஸ்தவ சமூகங்கள் போர்கள் முடிவடையவும், மக்களிடையே சமாதானம் மலரவும் செபமாலை செபிக்க அவர் அழைக்கிறார்.

ஒக்டோபர் 1ஆம் நாள் வத்திக்கான் தோட்டத்திலுள்ள லூர்து அன்னையின் கெபியில், நூற்றுக்கணக்கான குழந்தைகளுடன் திருத்தந்தை செபமாலை செபித்தார். பல மொழிகளில் எழுந்த அந்தச் சிறிய குரல்கள் ஒரே வேண்டுதலாக இணைந்தன: "**இயேசுவே, எங்களுக்கு அமைதியைத் தாரும்.**" அந்த வேண்டுதல் இன்று உலகம் முழுவதும் ஒலிக்கிறது.

**பத்து இலட்சம் குழந்தைகளின் ஒரே வேண்டுதல்** என்ற உணர்வோடு நடைபெற்ற வத்திக்கான் செப நிகழ்வில் சுமார் 1,200 பேர் கலந்துகொண்டனர். அவர்களில் சுமார் 700 பேர் குழந்தைகள். ரோமிலுள்ள பள்ளிகளிலும் பங்குகளிலும் இருந்து வந்த குழந்தைகள் திருத்தந்தையுடன் இணைந்தனர். அதே நேரத்தில் உலகின் பல நாடுகளைச் சேர்ந்த குழந்தைகள், குடும்பங்கள், பள்ளிகள் மற்றும் கிறிஸ்தவ சமூகங்களும் ஆன்மீகமாக அவர்களுடன் ஒன்றிணைந்தன.

“**பத்து இலட்சம் குழந்தைகள் செபமாலை செபிக்கின்றனர்**” என்ற உலகளாவிய முயற்சியின் தொடக்கமாக இந்த நிகழ்வு அமைந்தது. இத்தாலிய, ஸ்பானிய, உருது, ஜேர்மன், அரபு ஆகிய ஐந்து மொழிகளில் செபமாலையின் ஐந்து பத்துகளும் செபிக்கப்பட்டன. மொழிகள் வேறுபட்டிருந்தன. நாடுகள் வேறுபட்டிருந்தன. குழந்தைகளின் பின்னணிகளும் வேறுபட்டிருந்தன. ஆனால் அவர்களின் வேண்டுதல் ஒன்றே.

ஒளியின் மறையுண்மைகளைத் தியானித்த குழந்தைகளிடம், இயேசுவின் வாழ்வின் முக்கிய தருணங்களை நினைவுகூருமாறும், குறிப்பாகப் போரால் பாதிக்கப்பட்ட நாடுகளில் வாழும் குழந்தைகள் மற்றும் குடும்பங்களுக்காக அமைதியை வேண்டுமாறும் திருத்தந்தை ஊக்குவித்தார். பல மொழிகளிலும் எல்லாக் கண்டங்களிலிருந்தும் எழும் “**அருள் நிறைந்த மரியே**” செபங்கள், உலகையே தழுவும் ஒரு மாபெரும் செபமாலையாக விண்ணை நோக்கி எழுகின்றன என்ற அழகான காட்சி இந்த முயற்சியின் உள்ளார்ந்த பொருளை எடுத்துரைக்கிறது.

**ஒரு சிறிய செபம் உலகளாவிய இயக்கமானது.** இந்த முயற்சியின் தொடக்கம் மிகவும் எளிமையானது. 2005ஆம் ஆண்டு வெனிசுவேலாவின் கரகாசில் ஒரு குழந்தைகள்குழு மரியன்னையின் திருத்தலத்தில் செபமாலை செபித்துக்கொண்டிருந்தனர். குழந்தைகள் செபிக்கும் அந்தக் காட்சியைப் பார்த்தவர்கள், “**பத்து இலட்சம் குழந்தைகள் செபமாலை செபித்தால் உலகம் மாறும்**” என்று புனித பாத்ரே பியோவுக்குச் சார்த்தப்படும் ஒரு கூற்றை நினைவுகூர்ந்ததாக ஏற்பாட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

அந்தச் சிறிய நிகழ்வு படிப்படியாக உலகளாவிய இயக்கமாக வளர்ந்தது. பின்னர் “**துன்புறும் திருஅவைக்கு உதவி**” எனப்படும் Aid to the Church in Need அமைப்பு இம்முயற்சியை ஆதரித்து உலகின் பல நாடுகளுக்கும் கொண்டு சென்றது. இவ்வாண்டு இந்த முயற்சி மேலும் விரிவுபடுத்தப்பட்டு, ஒக்டோபர் 1 முதல் 7 வரை முழுச் செப வாரமாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. செபமாலை அன்னையின் திருநாளான ஒக்டோபர் 7 அன்று இந்தச் சிறப்புச் செப வாரம் நிறைவடைகிறது. ஆனால் திருத்தந்தையின் அழைப்பு ஒக்டோபர் 7ஆம் நாளோடு முடிவதல்ல. ஒக்டோபர் மாதம் முழுவதும், அதற்குப் பின்னரும் குடும்பங்களில் செபமாலை தொடர்ந்து ஒலிக்க வேண்டும் என்பதே இந்த முயற்சியின் ஆழமான நோக்கம்.**நோய்ப் படுக்கையிலிருந்து எழுந்த குடும்பச் செப இயக்கம்** நமக்கு இன்னொரு ஆழமான நினைவூட்டலை வழங்குகிறது. குழந்தைகளையும் குடும்பங்களையும் செபமாலை வழியாக ஒன்றிணைக்கும் இந்த எண்ணம் கத்தோலிக்கத் திரு அவைக்குப் புதியதல்ல. குருத்துவத்திற்குப் படித்துக்கொண்டிருந்த இளம் பேட்ரிக் பெய்டன் கடுமையான காசநோயால் பாதிக்கப்பட்டபோது, அவரது எதிர்காலமே கேள்விக் குறியானது. அந்த நெருக்கடியில் அவர் அன்னை மரியாவின் பரிந்துரையை நாடிச் செபித்தார். பின்னர் ஏற்பட்ட அவரது குணமடைதலை மரியன்னையின் பரிந்துரையால் பெற்ற அருளாக அவர் கருதினார்.



அருட்பணி மனுவற்பிள்ளை டேவிட்
குருமுதல்வர்

இந்த அனுபவம் அவரது வாழ்வின் திசையை மாற்றியது. 1942ஆம் ஆண்டு அவர் குடும்பச் செபமாலை இயக்கத்தைத் தொடங்கினார். பின்னாளில் “செபமாலைக் குரு” என்று அறியப்பட்ட அவரது புகழ்பெற்ற வார்த்தைகள் இன்றும் உலகெங்கும் ஒலிக்கின்றன: “**ஒன்றாகச் செபிக்கும் குடும்பம், ஒன்றாக நிலைத்திருக்கும்.**”

இந்தச் சொற்கள் வெறும் ஒரு இயக்கத்தின் வாசகம் அல்ல. குடும்ப வாழ்விற்கான ஆழமான ஆன்மீக வழிகாட்டுதல். இறைவனை நோக்கி ஒன்றாகத் திரும்பும் குடும்பம், ஒருவரையொருவர் நோக்கித் திரும்பவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

**செபமாலையின் மையம் கிறிஸ்துவே.** புனித திருத்தந்தை இரண்டாம் யோவான் பவுல் செபமாலையை மிகவும் நேசித்தவர். மகிழ்ச்சியான காலங்களிலும் கடினமான காலங்களிலும் அது தனது வாழ்விற்குத் துணையாக இருந்ததாக அவர் சாட்சியமளித்தார். அவரது Rosarium Virginis Mariae திருத்தூது மடல், செபமாலை என்பது வெறுமனே மரியன்னையை நோக்கிய பக்தி முயற்சி அல்ல என்பதை நினைவூட்டுகிறது.

மரியன்னையுடன் சேர்ந்து கிறிஸ்துவின் முகத்தைத் தியானிப்பதே அதன் மையம். செபமாலையின் ஒவ்வொரு மறையுண்மையும் நம்மை இயேசுவின் வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு மற்றும் மீட்பின் மறையுண்மைகளுக்குள் அழைத்துச் செல்கிறது. எனவே மகிழ்ச்சியில் நாம் நன்றி கூறலாம். துன்பத்தில் இறைவனிடம் மனதைத் திறக்கலாம். எதிர்காலம் தெளிவில்லாதபோது நம்பிக்கையுடன் காத்திருக்கலாம்.

அன்னை மரியாவின் வாழ்வே இதற்குச் சாட்சி. இறைவனின் அழைப்பு வந்தபோது எல்லாக் கேள்விகளுக்கும் அவரிடம் விடை இருக்கவில்லை. ஆனாலும், “உமது சொற்படியே எனக்கு நிகழட்டும்” என்று தன்னை ஒப்படைத்தார். சிலுவையடியில் தன் மகன் துன்புற்றபோதும் அவர் விலகிச் செல்லவில்லை. மரியன்னையுடன் செபிப்பது, நம் வாழ்வின் சிரமங்களிலிருந்து தப்பிப்பதல்ல. அவற்றின் நடுவிலும் நம்பிக்கையுடன் நிலைத்திருக்கக் கற்றுக் கொள்வதாகும்.

“**அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்**” என்ற கானா திருமண நிகழ்வின் வார்த்தைகள் நமது செபமாலைக்கும் வழிகாட்டுகின்றன. ஒரு குடும்பத்தின் தேவையை மரியன்னை முதலில் கவனித்தார். அதை இயேசுவிடம் எடுத்துச் சென்றார். பின்னர் பணியாளர்களிடம், “**அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்**” என்றார்.

இதுவே நமக்கான வழியும் ஆகும். பிறரின் தேவைகளை நாம் கவனிக்க வேண்டும். அவற்றை இறைவனிடம் கொண்டுசெல்ல வேண்டும். பின்னர் இறைவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் அன்பின் செயலைச் செய்யத் தயாராக இருக்க வேண்டும். இதனால்தான் திருத்தந்தை பதினான்காம் லியோ குழந்தைகளிடம் செபத்தோடு நற்செயல்களையும் இணைக்கும்படி கேட்டார். வீட்டில், பள்ளியில், மறைக்கல்வி வகுப்பில், விளையாடும் இடத்தில், பெற்றோருடனும் நண்பர்களுடனும் பழகும் முறையிலும் அமைதியை வளர்க்க வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார். செபத்துடன் நற்செயல்களும் அன்பின் செயல்களும் இணைந்திருக்க வேண்டும். இப்படித்தான் அமைதி வளர்கிறது.

**நமது குடும்பங்களில் தொடங்கட்டும் இந்த அமைதி.** உலக அமைதிக்காகச் செபிப்பது மிகப் பெரிய பணிபோல் தோன்றலாம். ஆனால் அமைதி முதலில் நமது வீட்டிலேயே தொடங்க வேண்டும். ஒரு குடும்பத்தின் சாதாரண மாலை நேரத்தை நினைத்துப் பார்ப்போம். அன்றைய தினம் சகோதரர்கள் சண்டையிட்டிருக்கலாம். பெற்றோர் வேலைப் பளுவால் சோர்ந்திருக்கலாம். ஒருவரின் வார்த்தை இன்னொருவரைக் காயப்படுத்தியிருக்கலாம்.

அனைவரும் சில நிமிடங்கள் தொலைபேசிகளையும் தொலைக்காட்சியையும் ஒதுக்கிவிட்டு ஒன்றாகச் செபிக்கிறார்கள். செபத்தின் முடிவில் ஒருவர், “நான் பேசிய விதம் தவறு என்னை மன்னித்துவிடு” என்று சொல்கிறார். அந்தச் சிறிய தருணத்தில் உலக அமைதிக்காகச் சொல்லப்பட்ட செபம் அந்த வீட்டிலேயே வாழ்வுபெறத் தொடங்குகிறது.

சிறு குழந்தைகள் உள்ள குடும்பங்களில் முழுச் செபமாலையிலிருந்து தொடங்கவேண்டிய அவசியமில்லை. ஒரு பத்தை மட்டும் செபிக்கலாம். ஒரு மறையுண்மையை எளிமையாக விளக்கலாம். “இன்று நாம் யாருக்காகச் செபிக்கலாம்?” என்று குழந்தையிடம் கேட்கலாம்.

செபத்தின் பின்னர், “இன்று உன்னை மகிழ்ச்சிப்படுத்தியது என்ன? உன்னை வருத்தியது என்ன?” என்றும் கேட்கலாம். குழந்தையின் பதிலை அவசரமின்றிக் கேட்பதும் குடும்ப அமைதிக்கான ஓர் அன்புச் செயலே.

**நமது குழந்தைகளையும் முன்னிலைப்படுத்துவோம்.** நமது பங்குகள், மறைக்கல்வி நிலையங்கள், கத்தோலிக்கப் பாடசாலைகள் மற்றும் குடும்பத் திருத் தூதுப் பணி அமைப்புகள் திருத்தந்தையின் இந்த அழைப்புக்கு நடைமுறை வடிவம் கொடுக்கலாம். குழந்தைகள் செபமாலையின் பத்துகளை வழிநடத்தட்டும். அவர்கள் செபக் கருத்துகளை வாசிக்கட்டும். தாங்கள் யாருக்காக செபிக்க விரும்புகிறார்கள் என்பதை அவர்கள் சொல்லட்டும். அவர்களின் சிறிய குரல்களுக்குள் பெரிய அக்கறைகள் இருக்கின்றன.

நமது இலங்கைச் சூழலில், போரின் நினைவுகளை இன்னும் சுமக்கும் குடும்பங்கள், காணாமற்போனோரின் உறவினர்கள், இடம் பெயர்ந்தோர், நோயுற்றோர், தனிமையில் வாழ்பவர்கள், வறுமையால் துன்புறும் குடும்பங்கள் ஆகியோரைக் குழந்தைகளின் செபத்தில் நினைவு கூரலாம்.

தமிழ், சிங்களம் மற்றும் பிற மொழிகளைப் பேசும் குழந்தைகள் ஒன்றாகச் செபிக்கும் நிகழ்வுகளையும் ஏற்பாடு செய்யலாம். வெவ்வேறு மொழிகளில் சொல்லப்படும் “அருள் நிறைந்த மரியே” ஒரே இறைவனை நோக்கி எழும்போது, அது நமது நாட்டிற்கே ஒரு அழகான அமைதியின் அடையாளமாக அமையும்.

**சிறிய கைகளில் உலகின் நம்பிக்கை இருக்கிறது.** பத்து இலட்சம் குழந்தைகள் உலக அமைதிக்காகச் செபிப்பது பெரியவர்களாகிய நமக்கே ஒரு கேள்வியை எழுப்புகிறது. குழந்தைகள் அமைதிக்காக இறைவனிடம் வேண்டிக்கொண்டிருக்கும்போது, அவர்கள் பாதுகாப்பாகவும் அன்புடனும் நீதியுடனும் வாழக்கூடிய உலகை உருவாக்க நாம் என்ன செய்கிறோம்?

அவர்கள் நம்மிடமிருந்து அன்பான வார்த்தைகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் பேசும்போது கேட்கும் காதுகளை எதிர்பார்க்கிறார்கள். மன்னிக்கத் தெரிந்த பெரியவர்களை எதிர்பார்க்கிறார்கள். பலவீனமானவர்களை மதிக்கக் கற்றுத்தரும் முன்மாதிரிகளை எதிர்பார்க்கிறார்கள்.

(தொடர்ச்சி 5ம் பக்)



# ஏழைகளை அன்பு செய்து அரவணைக்கும் புனித வின்சென்டி போல் சபை



திருஅவையில் காலத்துக்குக் காலம் இறைமகன் இயேசுவின் இறையாட்சிக் கனவை நனவாக்க இறைவன் தகுதியானவர்களை எமக்குத் தந்து கொண்டிருக்கின்றார். “பலியை அல்ல இரக்கத்தையே விரும்புகின்றேன் என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப, ஏழை மக்கள் மீதும், துன்புறும் உறவுகளின் மீதும் இரக்கம் கொண்டு வாழ்ந்து பலர் இறைவனால் மகிமைப்படுத்தப்பட்டுத் திருப்பீடங்களில் வணக்கத்தக்க புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ளனர். ஏழை எளியோரின் தந்தை என்று அழைக்கப்படும் புனித வின்சென்டி போல். திருஅவையில் ஏழைகளின் பாதுகாவலராக விளங்குகின்றார். இவருடைய பெருவிழா புரட்டாதி மாதம் 27ம் திகதி கொண்டாடப்படுகிறது.

### புனிதரின் பிறப்பும் புனிதமான வாழ்வும்

1581ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தென்பிரான்ஸ் பகுதியிலுள்ள “போய்” என்ற சிறிய கிராமத்தில் புனித வின்சென்டி போல் பிறந்தார். புனிதரின் காலத்தில் பிரான்ஸ் நாட்டில் சமய, சமூக, அரசியல் சூழல் மிகக் கடினமானதாக இருந்தது. பஞ்சம், பட்டினி மற்றும் நோய்களால் மக்கள் அதிகம் பாதிக்கப்பட்டார்கள். ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நோக்கோடு வண்டி உணவு தருமசபை ஒன்றை ஆரம்பித்தார். இது பெரும் வெற்றியை அளித்தது. இருப்போரிடம் இருந்து தானமாகப் பெற்றுக் கொண்ட உணவுப் பொருட்கள், உடைகள், போன்றவற்றை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தார். வண்டியுணவு தர்மசபையின் வெற்றி யைத் தொடர்ந்து பிறரன்பு பெண்கள் அமைப்பு (Ladies of Charity) என்ற அமைப்பையும் உருவாக்கினார். இவை அங்கம் வகித்த செல்வந்தப் பெண்கள் மகிழ் வோடும், தாராளமாகவும் உதவி செய்தார்கள். இவ்விரண்டு அமைப்புக்களும் காலப்போக்கில் பெரும் வெற்றி அளித்ததுடன், புனித வின்சென்டி போல் தரும சபை ஆரம்பிக்கப்படுவதற்கு தோற்றுவாயாக அமைந்தது.

### நிறுவுனர் அருளாளர் பிரெட்றிக் ஓசானம்

புனித வின்சென்டி போல் தரும சபையை புனித வின்சென்டி போல் தான் ஆரம்பித்தார் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆனால் இச்சபை அருளாளர் பிரெட்றிக் ஓசானம் என்பவரால் தான் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. 1813ம் ஆண்டு சித்திரைமாதம் 23ம் திகதி பிறந்த பிரெட்றிக் ஓசானம் அவர்கள் பல் கலைக்கழக மாணவனாக இருந்த போது, வறிய மாணவர்களுக்கு உதவி செய்வதற்காகத் தன்னோடு கல்வி பயின்ற எட்டு மாணவர்களோடு இணைந்து, ஒரு அமைப்பை ஏற்படுத்தினார். இவ் அமைப்பின் பணிகள் வளர்ச்சி அடைந்து உறுப்பினர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தது புனித வின்சென்டி போலும் இதை ஒத்த பணிகளை முன்னெடுத்தபடியால் இச்சபை அவரின் பாதுகாவலில் வைக்கப்பட்டு, அவரின் பெயரால் அழைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்னெடுக்கப்பட்டது. 1833ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சபை 1834ம் ஆண்டு புனித வின்சென்டி போலின் பாதுகாவலில் வைக்கப்பட்டு 193 ஆண்டுகளாக ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டி வருகிறது.

**இ.அ.அமலரட்ணம்**

### இலங்கையில் புனித வின்சென்டி போல் சபை

யாழ் மறைமாவட்டம் பல சிறப்புக்களையும், பெருமைகளையும் கொண்டது. இலங்கையில் முதன் முதல் புனித வின்சென்டி போல் சபை யாழ் மறைமாவட்டத்தில் தான் ஆரம்பிக்கப்பட்டது. 1905ம் ஆண்டு தை மாதம் 05ம் திகதி அப்போது யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் பணிபுரிந்த அமலமரித் தியாகிகள் குழுமத்தைச் சேர்ந்த அருட்சகோதரன் இயுஜின் குருசோ என்பவரால் ஆரம்பிக்கப்பட்டது. பேராலயச் சூழலிலே அதிகமான மக்கள் வறுமையிலே வாழ்ந்ததனால் அவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்ற நோக்கோடு தொடங்கப்பட்டது. பேராலயத்துக்கு அருகே புனித வளன் கத்தோலிக்க அச்சக வளாகத்தில் அமைந்திருந்த புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் முதல் கூட்டம் நடைபெற்று இச்சபை அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. (தற்போது பாதுகாவலன் மண்டபம் இருக்கும் இடத்தில் சிற்றாலயம் இருந்தது) புனித வின்சென்டி போல் சபை ஒவ்வொன்றும் ஏதாவது ஒரு புனிதரின் பெயரால் அழைக்கப்படுவது வழமையாகும். புனித சூசையப்பர் சிற்றாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டமையால் “புனித சூசையப்பர் பந்தி” என்ற பெயர் இதற்குச் சூட்டப்பட்டது.

121 வருடங்களைக் கடந்து இன்றும் இப்பந்தி பணிபுரிவது இறையருளின் துணையே ஆகும். இரண்டாவது பந்தி நாவாந்துறைப் பங்கில் 1910ம் ஆண்டு ஆடித்திங்கள் 19ம் நாள் ஆரம்பிக்கப்பட்டது. இன்று யாழ் மறை மாவட்டத்தில் மூன்று இளையோர் பந்திகள், ஆறு மாணவர் பந்திகள் உட்பட 59 வந்திகள் பணிபுரிகின்றன. இறுதியாக கிளிநொச்சி மறைக்கோட்ட இரணைமாதா நகரில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் அனைத்து மறை மாவட்டங்களிலும் புனித வின்சென்டி போல் சபைகள் இயங்குவது பெருமைக்குரியதே.

### சபையின் பணிகள்

புனித வின்சென்டி போல் சபை பங்குத்திருஅவை யில் பங்குத் தந்தைக்கு வலதுகரமாக இருந்து பணிபுரிகிறார்கள். ஆன்மீகப் பணிகளையும், பிறரன்புப் பணி களையும் தமது பங்கு எல்லைக்குட்பட்ட மக்களுக்கும் தேவையேற்படும் போது பங்குக்கு வெளியேயும் மகிழ் வோடு ஆற்றுகின்றனர். குடும்பங்களை அடிக்கடி சந்தித்து அவர்களோடு உரையாடி அவர்களின் தேவைகளைக் கண்டறிந்து ஆன்மீகத் தேவையுடையோரைப் பங்குத் தந்தையோடு தொடர்புபடுத்தி, தேவைகள் நிறைவேற உதவிபுரிகின்றார்கள்.

இறைமகன் இயேசுவுக்காகத் தங்களைத் தாழ்த்தி இரப்பவர்களாக மாறி, வீடு வீடாகச் சென்று நிதியையும், பொருட்களையும் சேகரித்து தேவையில் இருக்கும் வறிய மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்கள். உலர் உணவு உதவி, கல்வி உதவி, சுயதொழில் உதவி, வாழ்வாதார மேம்பாட்டிற்கான கடன், மலசலகூடம் அமைத்துக் கொடுத்தல், வீடு திருத்த உதவி போன்றவை இவர்களால் முன்னெடுக்கப்படுகின்றன. மாதாந்த சேகரிப்பு, மகிமை அங்கத்தவர் உதவி, உபகாரிகள் உதவி, காணிக்கை மூலம் கிடைக்கும் உதவி, (தொடர்ச்சி 05 பக்)



# சரிவதா? உயர்வதா?

**மி.நோயல்**

**வா**ழ்க்கை என்பது சவால்கள் நிறைந்ததுதான். தடைகளும் தோல்விகளும் நம் அன்றாட வாழ்வில் சந்திப்பவைதான், சந்திக்க வேண்டியவைதான். ஆனால், இந்தச் சவால்களையும் தடைகளையும் நம்மால் இன்று நிச்சயமாகச் சந்திக்க முடியும்: வெற்றிபெற முடியும்.

இன்றைய இளைய தலை முறைக்கு வெற்றி பெறும் வாய்ப்புகள் ஏராளம், நல்ல உடல் நலம், ஏராளமான கல்வி ஏழைகள்கூடத் தன்னம்பிக்கையோடு படித்து உழைத்து முன்னேறும் வாய்ப்புகள் எனப் பல வாய்ப்புகள் உள்ளன.

நல்ல கல்வியையும் திறமையையும் வளர்த்துக் கொண்டு விட்டால். நம் உள்ளூரில் மட்டுமல்ல, உலகெங்கும் நம் திறமைக்குச் சவால்விடும் வாய்ப்புகள் உண்டு. ஒரு காலத்தில் நினைத்தே பார்க்க முடியாத ஊதியம். வாழ்க்கைத்தரம் உயரும். நம்மைப்போல் நம்மைச்சுற்றி வாழ்ந்து வளர்ந்த பலரும் பல உலகளாவிய பன்னாட்டு நிறுவனங்களின் தலைவர்களாக மாறி இருக்கிறார்கள். சென்னையில் பயின்ற சுந்தர் பிச்சைதான் இன்று “கூகுள்“ நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக இருக்கிறார்,

சொந்தக் காலில் நிற்கவேண்டுமா? அதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. உயர் தொழில்நுட்பத் துறைகளில் இன்று புதிய புதிய தொழில் முனைவோர்களை நாம் பார்க்க முடி கிறதே நம்மாலும் இப்படியெல்லாம் முன்னேற முடியாதா? வெற்றிபெற முடியாதா? நம் வீட்டிற்கும் நாட்டிற்கும் பெருமைசேர்க்க முடியாதா?

முடியும்... நிச்சயம் முடியும்! ஆனால், ஒன்று. அது நம் கையில்தான் இருக்கிறது. நம் சிந்தனையில், சொல்லில், செயல்திறனில்தான் இருக்கிறது...

எந்த அளவுக்கு வாழ்க்கையில் உயரவேண்டும் என்பதை நாம் தான் முடிவு செய்யவேண்டும். அதை அடையும் முயற்சிகளையும் நாம்தான் மேற்கொள்ளவேண்டும், தடைகளைக் கடந்து, எதிர்வரும் சவால்களைச் சமாளித்து உயரவேண்டும். மேலே, மேலே... இன்னும் மேலே உயரவேண்டும்.

வாழ்க்கையில் முன்னேற்றம் என்பது மலையேற்றம் போன்றதுதான். எந்த மலைச்சிகரத்தை எட்டப்போகிறோம் என்பது நம் கையில்தான் உள்ளது. ஆனால், ஒன்றை நாம் மிக மிக ஆழமாக நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். மலையேற்றம் சமவெளியில் நடப்பதைப் போன்றதல்ல.

சமவெளியில் பலரும் பயணித்த வழித்தடங்களில் நடந்து செல்வது பாதுகாப்பானது. கொஞ்சம் எச்சரிக்கையாக இருந்தால் போதும், பயணம் சலனமில்லாமல் ஓடிவிடும். ஆனால், மலை யேற்றம் கடினமானது மட்டுமல்ல் ஆபத்துகள் நிறைந்தது. “கரணம் தப்பினால் மரணம்“ என்பார்கள்.

முன்னேறுபவர்களின் வாழ்க்கை பலருடைய கண்களிலும் படுகிறது, நல்லவர்கள் கண்ணிலும் படுகிறது, நம்மை வாரிவிட நினைப்பவர்களின் கண்களிலும் படுகிறது. பலர் பொறாமைப்படக்கூடும். அவர்களில் சிலர் நம்மைத் தடுமாறவைக்க முயலவும் கூடும். இன்னும் சிலர் நண்பர்கள் போல நடித்து நம்மைப் படுகுழியில் தள்ளிவிட முயற்சிக்கவும் கூடும். •



# உறவுகளின் உறைவிடம் வெற்றி மாலை

**செபமாலை சாத்தானை நடுங்க, செய்கிறது: அனைவரும் செபமாலை செபித்தால் சாத்தான் உலகில் இருக்க வாய்ப்பில்லை**



**வெ**ற்றியின் ஆயுதம் செபமாலை துன்பங்களின் ஆயுதம் செபமாலை பணிவைத்தந்திடும்செபமாலைதினமும் செபிப்போம் செபமாலை!

அன்னையின் அரவணைப்பில் என்றும் வாழத் துடிக்கும் அன்னையின் செல்வங்களே! செபமாலைமாதம்" என்னும் இத்திங்களே அன்னையின் பிறப்பு விழாவை அடுத்து அவருக்கு இந்த மாதம் முழுவதும் செபமாலை மூலம் சிறப்புச் செய்வது என்பது திரு அவையின் மூலம் இறைவன் நமக்குக் கொடுத்திருக்கும் இன்னும் ஒரு வாய்ப்பு. இதை விமர்சனம் செய்யும் சிலர் உள்ளனர்.

வெற்றி மாலையா? செபமாலையா?" அதாவது "முட்டையிலிருந்து கோழியா? கோழியிலிருந்துமுட்டையா?" என்ற உங்கள் நிலைப்பாட்டில் நான் தலையிடவில்லை. பண்டைய நாட்களில் போருக்குச் சென்று வெற்றி பெற்று வருகையில் கொன்றை மாலைதான் வெற்றி மாலையாக அரசனுக்குச் சூட்டி தோரணம் கட்டி, கன்னிப் பெண்கள் வரவேற்பார்கள். இதற்கும் நமக்கும் என்ன? புனித தோமினிக் 1214-இல் அல்பினியர்களைக் கத்தோலிக்கர்களாக மாற்ற மூன்று நாள் ஒரு குகையில் தனிமையில் தவம் செய்தார். அப்போது மரியா காட்சியில் தோன்றி, செபமாலையைக் கொடுத்து, "செபி, அவர்கள் மனம் மாறுவர்கள்" என்றார். செபித்தார். வெற்றி பெற்றார்,

1571-இல் துருக்கியர்களுக் ஸகும் கிறிஸ்தவர்களுக்கும் நடந்த போரில் செபமாலை செபித்த பின்பு வெற்றி பெற்றார்கள். எனவே தான் வெற்றி பெற்ற ஒக்டோபர் மாதம் ஏழாம் நாளை திருத்தந்தை ஐந்தாம் பத்திநாதர் "வெற்றி மாதா விழாவாக அறிவித்தார். இவ்வாறு வெற்றி மாதாவாகக் கொண்டாடிய விழாவைத் திருத்தந்தை 11-ஆம் கிளமெண்ட் மாற்றி 1673-இல் செபமாலை மாதா விழாவாகக் கொண்டாடப் பணித்தார்.

கிட்டதட்ட அதே காலகட்டத்தில் இயேசு சபைக் குருக்கள் மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு பணி செய்தார்கள். அப்போதே கருமுத்தன், ன்ற சிற்றரசன் இங்கு ஆட்சி செய்த கால்தில் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள். கள் சிற்றாலயம் அமைத்து அதில் செபமாலை அன்னையின் சுரூபம் வைத்து வணங்கியதாக வரலாற்றில் காண்கிறோம். ஆனால், இப்போதுள்ள செபமாலை மாதா சுரூபம் மணிலாவில் இருந்து வந்தது என அறிகிறோம். மாதா சுவாமிநாதருக்குக் காட்சி தந்த காலகட்டத்தில் செபமாலை மாதா பக்தி கருமுத்தன் நகரில் இருந்தது என்பது வரலாறு கூறும் உண்மை,

செபமாலைப் பக்தி முயற்சி புதிய ஏற்பாடு நற்செய்தியினையும், திரு அவையின் பாரம்பரியப் போதனையை யும் மீண்டும் மீண்டும் தியானிக்கச் செய்கிறது. இதன்மூலம் ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை. திரு அவையின் வளர்ச்சி, அதில் மரியாவின் பங்கேற்பு... இவை இடம்பெறுகின்றபோது, இறைவார்த்தை வாசிப்பிற்கு இணையாக இம் முயற்சி உள்ளது. இன்று அன்னையின் திருக்காட்சிகளில் குறிப்பாக, ஒளியின் மறையுண்மைகளைத் தியானிக்கும் போது, எனது உறவு இயற்கையோடு எப்படி உள்ளது? என்பதை அறிய முடிகிறது. அங்கே நதி, மலை, கடல், புல்வெளி, வீடு என்று இயற்கை மணம் கமழ்கிறது அந்த மணத்துடன் ஒன்றித்து வாழ்கிறேனா? எனச் சீர்தூக்கிப் பார்க்க அழைக்கிறது.

மாட்சி நிறை மறையுண்மைகள் வழியாக, நாம் இறைவனோடு உறவு கொள்ள முடிகிறது. நாம் மண்ணிற்காக அல்லது விண்ணிற்காகப் படைக்கப் பட்டவர்கள் என்பதை உணர்ந்து தியானித்துச் செபிக்கும்போது இறைவனோடு தொடா சங்கிலி போல் உறவோடு வாழ முடிகிறது. ஏனெனில், மண்ணில் பிறந்த மரியா விண்ணகத்திற்கு ஆன்மீக உடலோடு சென்றது போல் நாமும் செல்வோம் என்ற நம்பிக்கை வழி நம் இறையுறவு வளர்கிறது. எனவே, செபமாலை உறவுகளின் சங்கமம், உன்னதமான உறவுகளை எமக்குத் தரும் சிறந்த செபம் புனித ஜான் மரிய வியான்னி, புனித லூயிஸ் தே மாண்ட்போர்ட், புனித அகாட்சி, போர்ச்சுக்கல் - பாத்திமா நகர் காட்சிகளில் அன்னை செபமாலையுடன் செபித்த நிலையைக காண்கிறோம். அதே சமயத்தில் காட்சி கண்ட சிறுவர்கள் மற்றவர்களையும் செபமாலையைச் செபிக்க அழைக்கிறார். இதிலிருந்து அதன் முக்கியத்துவத்தையும் அறிய முடிகிறது.

செபமாலை செபிப்பது உறவுகள் உறுதிபெற என்பதை உணர்ந்து செபிப்போம். மரியா எலிசபெத்தைச் சந்தித்தது, காணாமல் போன மகனைத் தேடிச் சென்றது, கானா வூர் திருமணத்தில் ஏற்பட்ட துன்பத்தை அகற்றியது. இயேசுவைப் பின் தொடர்ந்த பெண்களை ஒருங்கிணைத்து. கல்வாரிப் பயணத்தில் துணை நின்றது. பயந்து நடுங்கிய திருத்தூதர்களை ஒருங்கிணைத்துச் செபித்தது போன்ற நிகழ்வுகளில் மரியா உறவுக்குக் கைகொடுக்கிறார்.

இதற்குக் காரணம் மரியா இறை வார்த்தையை உள்ளத்தில் இருத்திச் சிந்தித்தது தான். அதனால்தான மரியாவை எலிசபெத்தும் (லூக். 1:42-43), கூட்டத்திலிருந்த பெண் ஒருத்தியும் (லூக் 11:27) பாராட்டுகிறார்கள்.

மகிழ்ச்சி நிறை மறையுண்மைகளை நாம் தியானித்துச் செபிக்குமபோது, இறைவனோடுத்து உறவு நிலை எப்படி உள்ளது?" எனச் சிந்தித்துச் சீர்தூக்கிச் செம்மைப் படுத்த உதவுகிறது.

துயர் நிறை மறையுண்மைகளைத் தியானித்துச் பிக்கும்போது, பிறரோடு எனது உறவு. இயேசுவின் மேல் உள்ள அன்பை: அவரது கட்டளைகளை எப்படிச் செயல்படுத்துகிறேன்? எனச் சிந்தனை செய்து, மற்றவர்களோடு எனது உறவுப் பாலம் எப்படி உள்ளது என்பதை அறிந்து வாழ்ந்திடத் துணை செய்கிறது.

அல்போன்ஸ் லிகோரி, புனித பியோ போன்றோர் செபமாலைப் பக்தி கொண்ட வர்களாக இருந்து இன்று புனிதர்களாக உள்ளார்கள். புனித கேப்ரியல், "செபமாலை சாத்தானை நடுங்க, செய்கிறது: அனைவரும் செபமாலை செபித்தால் சாத்தான் உலகில் இருக்க வாய்ப் பில்லை" என்கிறார்.

**அனைவரும் செபமாலை செபிப்போம் அப்போது அன்னை திருத்தூதர்களோடு சேர்ந்து செபித்ததுபோல் நம்மோடும் சேர்ந்து செபிக்கிறார் என்பதை உணர்ந்து அவரது அரவணைப்பில் இறையாசீர் பெறுவோம்.**

## ஏழைகளை அன்பு செய்து

( 4ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வப்போது கிடைக்கும் நலன்புரி உதவிகள் மற்றும் சபைக்கானசுய வருமான முயற்சி மூலம் தமக்கான நிதியைத் தேடிக் கொள்கின்றனர்.

**நிறைவாக**

புனித வின்சென்டி போல் சபை உலகில் 160 நாடுகளுக்கு மேல் செயற்பட்டு வருகின்றது. சர்வதேச வின்சென்டி போல் சபை அரச சார்பற்ற உதவி நிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மறைமாவட்டம், தேசியம், ஆசிய பிராந்தியம், சர்வதேச அமைப்பு என இது விரிநடைந்து செல்கின்றது. "என் சின்னஞ் சிறிய சகோதரர்களுக்கு இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள்" (மத். 25:40) என்ற இறைவார்த்தைக் கொப்ப இச்சபையின் உறுப்பினர்கள் திருஅவையில் சாரமுள்ள உப்பாக உழைக்கின்றனர்" ஏழைகளுக்கு உதவி செய்பவன் கடவுளுக்குள் கடன் கொடுக்கிறான்" எனவே இச்சபை உறுப்பினர்கள் ஆற்றுகின்ற ஆன்மீகப் பிறரன்புப் பணிகளுக்காக இறைவன் கைமாறு கொடுப் பார் என நம்புவோம். இச்சபை சிறப்பான பணிகளை முன்னெடுக்கவும் நிறுவுனர் அருளாளர் பிறெட்றிக் ஓசானம் புனிதர் நிலைக்கு உணர்த்தப்படவும் இறையருள் வேண்டுவோம்.

## சிறிய கைகளில்....

(3ம் பக்கத் தொடர்ச்சி)

செபமாலையை குழந்தைகளின் கைகளில் கொடுப்பது மட்டும் போதாது. செபமாலையில் நாம் வேண்டுகிற அமை தியை அவர்கள் வாழும் உலகில் உருவாக்குவதும் பெரியவர்களின் கடமையாகும்.

வத்திக்கான் தோட்டத்தில் ஒக் டோபர் 1 அன்று எழுந்த அந்தச் செபம் நமது ஆலயங்களிலும் வீடுகளிலும் தொடரட்டும். ஒக்டோபர் மாதம் செபமலையின் மாதம். திருத்தந்தையின் அழைப்பை ஏற்று, இந்த மாதத்தில் ஒவ்வொரு குடும்பமும் இயன்றவரை ஒன்றாகச் செபமாலை செபிப்போம். உலகின் போர்கள் முடிவடையவும், துயருறும் குழந்தைகள் பாதுகாப்பைப் பெறவும், பிரிந்த குடும்பங்கள் ஒன்றி ணையவும், நமது நாட்டில் ஒப்புரவும் அமைதியும் வளரவும் வேண்டுவோம்.

ஒரு குழந்தையின் கையில் இருக்கும் சிறிய செபமாலை உலக அரசியலை மாற்றக்கூடிய ஆயுதம் அல்ல. ஆனால் அது ஒரு இதயத்தை மாற்றக்கூடும். ஒரு குடும்பத்தை மாற்றக்கூடும். ஒரு சமூகத்தில் மன்னிப்பைத் தொடங்கக்கூடும். பல இலட்சம் இதயங்கள் ஒரே நேரத்தில் அமைதியைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினால், உலகமும் மாறத் தொடங்கும்.

இன்று ஒரு குழந்தையுடன் செபிப்போம். அதன் குரலைக் கேட்போம். அதனுடன் ஓர் அன்புச் செயலைச் செய்வோம். உலகின் அமைதிக்காக நாம் எழுப்பும் வேண்டுதல், முதலில் நம் வீட்டில் வாழ்வுபெறட்டும்.

# க.பொ.த.சா/த கத்தோலிக்க திருமறை மாதிரி வினாக்களும் விடைகளும் வினாப்பத்திரம் -06

1. முதலாவது கட்டளை எந்தப் பண்புகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது?
அ) நம்பிக்கை, நம்பிக்கை இன்மை, அன்பு ஆ) நம்பிக்கை, எதிர்நோக்கு, இறைஅன்பு
இ) செபம் பலியாகுதல், நேர்த்தி ஈ)ஆராதனை, செபம், மன்றாட்டு

2. ஆபிரகாம் இறைவன் மீது கொண்ட நம்பிக்கையின் காரணமாக எவ்வாறு அழைக்கப்படுகின்றார்?
அ) இறைவனின் தூதர் ஆ) நம்பிக்கையின் தந்தை
இ) அன்பின் தந்தை ஈ) நீதியின் தந்தை

3. சவால்கள் நிறைந்த வாழ்விற்கு முகம் கொடுத்த நம்பிக்கையின் முன்மாதிரியாகத் திகழ்பவர் யார்? அ) ஆபிரகாம் ஆ) மரியா இ) மோசே (ஈ) யோசேப்பு

4. மனிதனைப் பாவ இச்சைகளில் இருந்து விடுவிப்பது எது?
அ) செல்வத்தைச் சேர்ப்பது ஆ) ஒரே கடவுளை மட்டும் ஆராதிப்பது
இ) உலகியல் அறிவை வளர்ப்பது ஈ) சொந்த வலிமையைப் பயன்படுத்துவது

5. எதிர்நோக்கிற்கு எதிரான பாவங்களில் தவறானது எது
அ) எதிர்நோக்கை இழத்தல் ஆ) மிதமிஞ்சிய எதிர்நோக்கு
இ) இறைவனின் நன்மை தளத்தின் மீது நம்பிக்கை வைத்தல்
ஈ) தானே தனது மீட்பைப் பெற்றுக்கொள்ளலாம் என நினைத்தல்

6. இரண்டாம் கட்டளை எதனைக் குறிக்கின்றது?
அ) ஓய்வுநாளைத் தூயதாகக் கடைப்பிடித்தல்
ஆ) உன் கடவுளாகிய ஆண்டவரின் திருப்பெயரை வீணாகச் சொல்லாதிருத்தல்“
இ) பெற்றோரைக் கனம்பண்ணுதல்,
ஈ) கொலை செய்யாதிருத்தல்

7. ஞாயிற்றுக்கிழமையைத் தூய்மையாக அனுசரிக்க முதலில் செய்ய வேண்டிய முதன்மையான கடமை எது?
அ) தான தருமங்கள் செய்தல் ஆ) ஞாயிறுதிருப்பலியில் பங்கேற்பது
. இ) புனிதப் பயணம் செல்வது ஈ) மெழுகுவர்த்தி ஏற்றுவது

8. சமுதாயத்தின் மிகச்சிறிய.அலகு எது?
அ) பாடசாலை ஆ) குடும்பம் இ) திருஅவை ஈ) அரசு

9. வாக்குறுதியை உள்ளடக்கிய முதலாவது கட்டளை எது
அ) பெற்றோரைக் கனம்பண்ணுதல் (மதித்தல்). ஆ) கொலை செய்யாதிருத்தல்
இ) பொய்சாட்சி சொல்லாதிருத்தல் (ஈ)திருடாதிருத்தல்

10. தூய பவுல் எபேசியருக்கு எழுதிய திருமுகத்தில் (எபே 6:1-4) பெற்றோருக்குக் கூறும் அறிவுரை யாது?
அ) பிள்ளைகளைத் தண்டிக்கக் கூடாது
ஆ) பிள்ளைகளுக்கு எரிச்சலூட்டாது ஆண்டவருக்கு ஏற்ற முறையில் கண்டித்துத்திருத்தி வளர்க்க வேண்டும்.
இ) பிள்ளைகளை வேலை செய்யப் பணிக்க வேண்டும்
ஈ) பிள்ளைகளின் அனைத்து ஆசைகளையும் நிறைவேற்ற வேண்டும்.

11."பிள்ளாய்! உன் தந்தை தந்த நற்பயிற்சியைக் கடைப்பிடி உன் தாய் கற்பிப்பதை தள்ளி விடாதே" எனக் கூறும் நூல் எது?“
அ) சீராக் ஆ) கொலோசேயர் இ) நீதிமொழிகள் ஈ) எபேசியர்

12. "உங்களுக்குள் பெரியவராக இருக்க விரும்புகின்றவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும்" எனக் கூறும் விவிலியப் பகுதி எது?
அ) எபே6:1 ஆ) மத் 20:26 இ) சீராக் 3:2 ஈ) விப 20:12

13. பின்வருவனவற்றுள் தந்தையையும் தாயையும் மதித்து நட என்ற கட்டளைக்கு எதிரான செயல் எது?
அ) பெற்றோருக்குக் கீழ்ப்படிதல்
ஆ) பெற்றோரைக் கைவிடுதலும் முதியோர் இல்லத்தில் சேர்த்தலும்
இ) பெற்றோருக்குப் பொருளாதார ஆதரவு அளித்தல்
ஈ) ஆசிரியருக்குக் கீழ்ப்படிதல்

14. நாட்டு மக்களின் கடமைகளுள் ஒன்று எது?
அ)உரிய வரியைச் செலுத்துதல் ஆ) பொதுச் சொத்துக்களைச் சேதப்படுத்துதல்
இ) சட்டங்களை அவமதித்தல் ஈ) சுயநலமாகச் சிந்தித்தல்

15.கடவுள் மனிதனை எதன் உருவிலும் சாயலிலும் படைத்தார்?
(அ) தேவ தூதர்களின் ஆ) கடவுளின்
இ)இயற்கையின் ஈ)விலங்குகளின்

16.ஆண்டவராகிய கடவுள் மனிதனுக்கு எவ்வாறு உயிர் மூச்சை ஊதினார்?
(அ) நாசிகளில் ஆ) இதயத்தில் இ)வாயில் ஈ) கண்களில்

17."கொலை செய்யாதே" என்பது எத்தனையாவது கட்டளை?
அ) மூன்றாம் கட்டளை ஆ) நான்காம் கட்டளை
இ) ஐந்தாம் கட்டளை (ஈ) ஆறாம் கட்டளை

18."உனது வாளை அதன் உறையில் திரும்பப் போடு" என்று கூறியவர் யார்?
அ)மோசே ஆ) எரேமியா இ) இயேசு ஈ)காயின்

19. தாயின் கருவில் இருக்கும் கருவை அழித்தல் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) கருக்கலைப்பு ஆ) தற்கொலை
இ) சூழல் அழித்தல் ஈ-பொய்வழக்குத் தொடரல்

20. நேரடி கருக்கலைப்புச் செய்யும் ஒருவருக்குத் திருச்சபையிலிருந்து வழங்கப்படும் தண்டனை எது?
அ) அபராதம் விதித்தல் ஆ) திருச்சபையிலிருந்து நீக்கம்
இ) மன்னிப்பு மறுக்கப்படல் ஈ) சிறைத் தண்டனை

21 "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்கும் முன்பே அறிந்திருந்தேன்" எனக் குறிப்பிடும் விவிலிய நூல் எது?
(அ) தொடக்க நூல் ஆ) எரேமியா
இ) திருப்பாடல்கள் ஈ) மத்தேயு

22. ஏகாந்திகள் அல்லது வனத்துப் பிதாக்கள் என்று அழைக்கப்பட்டவர்களில் முதன்மையானவர் யார்?
அ) தூய அகுஸ்தினார் ஆ) தேப்ஸ் சின்னப்பராவார்.
இ) தூய பக்கோமியோ ஈ) தூய பெனடிக்

23. துறவற வாழ்க்கைக் கட்டுப்பாடுகளில் இல்லாத ஒன்றைத் தெரிவு செய்க.
அ) கற்பு இ) கீழ்ப்படிதல் இ) ஏழ்மை ஈ) செல்வம் சேர்த்தல்

24. குருத்துவம் சார்ந்த துறவற சபைகளுள் ஒன்று எது?
அ) மாரிஸ் சகோதரர்கள் சபை ஆ) சில்வெஸ்டர் பெனடிக் சபை
இ) அன்புச் சகோதரர்கள் சபை ஈ) பிரான்சிஸ்கன் மறைத்தூதுச் சகோதரர் சபை

25. இளைஞர்களுக்கான சுய தொழிற்பயிற்சி அளிப்பதை ஒரு பணியாகக் கொண்ட சபை எது?
அ) மாரிஸ் சகோதரர்கள் சபை ஆ) அமல மாரித்தியாகிகள் சபை
இ) திருக்குடும்பக் கன்னியர் சபை ஈ) நல்லாயன் கன்னியர் சபை

26. முதியோர் ஏழைகளைப் பராமரிப்பதை முதன்மைப் பணியாகக் கொண்டுள் சபை எது?
அ) தூய தூதர்கள் கன்னியர் சபை ஆ) ஏழைகளின் சிறிய சகோதரிகள் சபை
இ) திருச்சிலுவைக் கன்னியர் சபை ஈ) அன்பு சகோதரிகள் சபை

27, "மானிடரை நம் உருவிலும், நம் சாயலிலும் உண்டாக்குவோம்" எனக் குறிப்பிடப்பட்டுள்ள விவிலியப் பகுதி எது?
அ) தொடக்க நூல் 1:26-28 ஆ) திருச்சபை இல. 46
இ) தொடக்க நூல் 2:10-15 ஈ) மத்தேயு 5:1-5

28. பின்வருவனவற்றுள் துறவற வாழ்வின் பண்புகளுள் சேராதது எது?
அ) குழும வாழ்வு ஆ) செய்வாழ்வு இ) பணிவாழ்வு ஈ) தனிமை வாழ்வு

29. திருமுழுக்கின் ஊடாக அனைத்துக் கிறிஸ்தவர்களுக்கும் கிடைப்பது எது?
அ) பணிக்குருத்துவம் ஆ) பொதுக்குருத்துவம்
இ) குருத்துவப் பணி ஈ) இறைவாக்குப் பணி

30. கத்தோலிக்க மறைப் பாடசாலையின் பிரதான பணியாக விளங்குவது எது
அ) நற்செய்திப் பணி ஆ) மறையை அறிவித்தல்
இ) செபமாலை செபித்தல் ஈ) இல்லங்களைச் சந்தித்தல்

31. மரியாவின் சேனை யாரால் ஆரம்பிக்கப்பட்டது?
அ) பிராங் டஃப் ஆ) பிரடிக் ஓசானம் இ) கார்டினல் யோசப் ஈ) லியோ யோசப்

32. இளம் கத்தோலிக்க மாணவர் இயக்கத்தில் (YCS) உறுப்பினர்களாக இருக்கக் கூடிய வயதெல்லை என்ன?
அ) 18-25 ஆ)13-19 இ) 15-21 ஈ) 18- 25

33. கத்தோலிக்க மாணவர் இயக்கத்தின் செயற்பாட்டுப் படிமுறைகள் (3H) வரிசையில் எவை?
அ) அறிதல், புரிதல், செய்தல் ஆ) பார்த்தல், தீர்மானித்தல், செயல்
இ) செபித்தல் பகிர்தல் வாழ்தல் ஈ) உணர்தல், கற்றல், செயற்படல்

34. புனித வின்சன் டி போல் சபை அருளாளர் பிரட்டிக் ஓசானம் அவர்களால் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?
அ) கி.பி. 1833. ஆ) கி.பி. 1905 இ) கி.பி. 1904 ஈ) கி.பி. 1800

35. நதிகள் நமது சகோதரர்கள்" எனக் கூறியவர்யார்?
அ) தாவீது ஆ) சாலமோன் இ) சியடேல் ஈ) மோசே

36. எபிரேய மொழியில் நதா" என்னும் சொல்லின் கருத்து யாது?
அ) உழைத்து உருவாக்குதல் ஆ)அழித்து விடுதல்
இ) பராமரிப்பு ஈ)பயிரிடுதல்

37, மனிதன் இறைவனுடைய "உருவிலும் சாயலிலும்" படைக்கப்பட்டுள்ளான் எனக் குறிப்பிடும் விவிலியப் பகுதி எது"
அ) தொடக்க நூல் 126 ஆ)தொடக்க நூல் 1.28
இ) தொடக்க நூல் 215 ஈ) தொடக்க நூல் 3:10

38. எபிரேய மொழியில் பயிரிடுதல்" அல்லது உழைத்து உருவாக்குதல் என்பதைக் குறிக்கும் சொல் எது?
அ) ஷமார் ஆ) அபாத் இ) நதா ஈ) ஏதேன்

39. பாதுகாத்தல் என்பதைக் குறிக்கும் எபிரேயச் சொல் எது?
அ) ஷமார் ஆ) அபாத் இ) நதா. ஈ) ஏதேன்

40. ஏதேன் தோட்டத்தைப் பண்படுத்தவும் பாதுகாக்கவும் மனிதனைக் கடவுள் அங்கு குடியிருக்கச் செய்தார் எனக் கூறும் விவிலியப் பகுதி எது?
அ) தொடக்க நூல் 1:26 ஆ) தொடக்க நூல் 1:28
இ) தொடக்க நூல் 2:15 ஈ) தொடக்க நூல் 2:20

## விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | ஆ | 11 | இ | 21 | ஆ | 31 | அ |
| 2 | ஆ | 12 | அ | 22 | ஆ | 32 | ஆ |
| 3 | இ | 13 | ஆ | 23 | ஈ | 33 | ஆ |
| 4 | ஆ | 14 | அ | 24 | ஆ | 34 | அ |
| 5 | இ | 15 | ஆ | 25 | அ | 35 | ஆ |
| 6 | ஆ | 16 | அ | 26 | ஆ | 36 | இ |
| 7 | ஆ | 17 | இ | 27 | அ | 37 | அ |
| 8 | ஆ | 18 | ஆ | 28 | ஈ | 38 | இ |
| 9 | அ | 19 | அ | 29 | ஆ | 39 | அ |
| 10 | ஆ | 20 | ஆ | 30 | ஆ | 40 | இ |

யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்
யாழ். மறைக்கல்வி நிலையம்.

# வத்திக்கானில் பெண்களின் பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டும்: திருத்தந்தை

வத்திக்கானில் பணியாற்றும் பெண்களின் முக்கியமான பங்களிப்புகளை அங்கீகரித்து, பாராட்ட வேண்டும் என்று திருத்தந்தை வலியுறுத்தினார்.

'வத்திக்கானில் பெண்கள்' சங்கம் மற்றும் வத்திக்கான் பொது பணியாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளைச் திருப்பீடத்தில் சந்தித்துப் பேசியபோது இவ்வாறு மொழிந்த திருத்தந்தை, வத்திக்கானில் பெண்களின் பங்களிப்பு ஒரு முக்கியமான பலமாக இருப்பதாகக் குறிப்பிட்டார்.

அவர்களின் பங்களிப்பை மேலும் அதிக அளவில் அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் திருத்தந்தை வலியுறுத்தினார். மனித உறவுகளை கையாள்வதில் பெண்களுக்கே உரிய தனித்துவமான உணர்வுத்திறன், அவர்களது மனிதாபிமானம், தொழில்முறை ஆளுமை மற்றும் அறிவாற்றல் ஆகியவற்றை திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

இறுதியாக, அவர்களின் நிபுணத்துவம், படைப்பாற்றல், சிந்தித்து முடிவெடுக்கும் திறன் மற்றும் நடைமுறை அணுகுமுறை ஆகியவை வத்திக்கான் நிறுவனங்களின் பணிகளை வளப்படுத்துவதுடன், பல்வேறு சவால்களை விரிவான கோணத்தில் புரிந்துகொள்ளவும் உதவுகின்றன என்று குறிப்பிட்டு தனது திருத்தூது ஆசீரை வழங்கி திருத்தந்தை உரையை நிறைவு செய்தார்.


## விண்ணக வாழ்வின் 22ம் ஆண்டு நினைவு

"இன்றே நீ என்னோடு வான் வீட்டில் இருப்பாய்"

மண்ணில்
17
.
04
.
1939



விண்ணில்
04
.
10
.
2004

அமரர்

### சூசைப்பிள்ளை சாள்ஸ்

அன்புக்கு அர்த்தம் தந்து
பண்புக்குப் பாடம் சொல்லி
பாசத்துக்கு நேசம் காட்டி
ஆருயிர் துணையதை
தன்னுயிராய் எண்ணி
ஈருயிரும் ஒருயிராய் ஒன்றிணைந்து
நம்மையெல்லாம் நவரத்தினமாய்
உலகளா ஆசான், அறிஞன் ஆக்கி
உன் தேகம் தேயக் கடலாண்டு
எம்மைக் கரைசேர்த்த கண்ணியவான்
எங்கள் காவல் தெய்வம் நீங்கள்

தந்த எண்ணிலா அன்புக்கு
என்றும் நிகரில்லாத்
தாயான எம் தாய்க்கெல்லாம்
தாயானவன் நீ
ஆண்டுகள் இருபத்தொன்று
மூழ்கிப் போனாலும்
ஆறாத உம் பிரிவுக்கடலில்
நித்தமும் மூழ்கித் தவிக்கின்றோம்
கண்ணீரில் தத்தளிக்கிறோம் தந்தையே
உன் பிரிவால் என்றும்
எம் இதயக்கோவிலில் நீரே ஐயா

5ம் வட்டாரம், மண்டைதீவு.

பாசமுடன் நினைவு கூரும்
அருட்தந்தை சா. ஜஸ்ரின்

AD - 159



## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவு

பிறப்பு
05
.
04
.
1955



இறப்பு
26
.
10
.
2025

அமரர்

### கிறிஸ்ரினம்மா செபரத்தினம்

ஆண்டவர் தம் அன்பர்களின் சாவு அவரது பார்வையில் மிக மதிப்பிற்குரியது
(தி.பா. 115:15)

இராச வீதி
2ம் கட்டை கோப்பாய் மத்தி
கோப்பாய்.

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்

AD 157



## விண்ணக வாழ்வில் 15ம்ஆண்டு நிறைவு

பிறப்பு
19
.
01
.
1977



இறப்பு
19
.
10
.
2011

அமரர்

### கி. ஜிமாலினி சகாய்ரூப [விஜி]

15 ஆண்டுகள் ஆனதம்மா
ஆயினும் மறையவில்லை
உன் பிரிவின் காயங்கள்
கண்ணீர்த் துளிகளும்
நித்தம் நித்தம் நீ வருவா என
காத்துக் கொண்டு நிக்கின்றோம்.
அதுவரைக்கும் நாம் தேற்றிக் கொண்டு
நிற்கின்றோம் உன் ஆன்ம
சாந்திக்காய் நித்தம்
இறைவனை வேண்டுகின்றோம்

## விண்ணக வாழ்வில் 4ம் ஆண்டு நிறைவு

பிறப்பு
16
.
06
.
1950



இறப்பு
30
.
04
.
2022

அமரர்

### யோவான் யேசுராசா [செபமாலை]

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்.
என் ஓட்டத்தை முடித்து விட்டேன். விசுவாசத்தை
காத்துக்கொண்டேன்.
இனி எனக்கென வைக்கப்பட்டிருப்பது
நேரிய வாழ்வுக்கான வெற்றி வாகையே."
(2 தீமோத்தேயு 4: 7-8)

தகவல்
J. விஜயன்
பருத்தித்துறை றோட்
நெல்லியடி
கரவெட்டி

AD-158


## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தனிப்பட்ட நாட்குறிப்பு வெளியீடு

கர்தினால் விக்டர் மானுவல் பெர்னாண்டஸ் எழுதிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தனிப்பட்ட நாட்குறிப்பு என்ற நூலை வத்திக்கான் பதிப்பகம், நவம்பர் 24ஆம் நாள் வெளியிட உள்ளது.

1992 டிசம்பர் 20 முதல் 2024 ஆகஸ்ட் 18 வரை ஜார்ஜ் மரியோ பெர்கோக்லியோ பதிவு செய்திருந்த தனிப்பட்ட குறிப்புகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. அவற்றுடன் கர்தினால் பெர்னாண்டஸ் அவர்களின் விளக்கங்களும் இடம்பெறுவதால், மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆன்மீக வாழ்க்கை மற்றும் ஆளுமையை வாசகர்கள் ஆழமாகப் புரிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்.

2013 மார்ச் 13ஆம் நாள் முதல் 2025 ஏப்ரல் 21ஆம் நாள் அவர் மறையும் வரை கத்தோலிக்க திருஅவையின் தலைவராக இருந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்தச் சிந்தனைகளைப் பதிவு செய்துள்ளார். நம்பிக்கை கோட்பாட்டுக்கான திருப்பீடத்தின் தலைவர் கர்தினால் விக்டர் மானுவல் பெர்னாண்டஸ் அவர்கள், இந்த நாட்குறிப்பைத் தொகுத்து வழங்குவதுடன், அதில் இடம்பெற்றுள்ள தனிப்பட்ட எழுத்துகளுக்கு விளக்கங்களையும் அளித்துள்ளார்.

# மறைக்கல்விக் கண்காட்சி




இளவாலை புனித யாகப்பர் பங்குத் திருஅவையினால், 4ஆம் திகதி பங்குத்தந்தை அருட்தந்தை சில்வேஸ்டர் தாஸ் அவர்களின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் மறைக்கல்விக் கண்காட்சியின் பிரதம விருந்தினராக அருட்பணி ஸ்ரிபன் கலந்து சிறப்பித்தார்.

# புனித வின்சென்ட் டி போல் திருவிழா




யாழ். மறைமாவட்ட புனித வின்சென்ட் டி போல் மத்திய சபை வருடாந்த பொதுக்கூட்டமும் வின்சென்ட் டி போல் திருவிழாவும் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. சபை ஆன்மீக ஆலோசகர் அருட்தந்தை நேசநாயகம் அவர்களின் வழிநடத்தலில் தலைவி சகோதரி யாக்கோப் மரியநாயகி அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் அவர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. திருப்பலி நிறைவில் பேராலய மண்டபத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றதுடன் இக்கூட்டத்தில் கடந்த வருட செயற்பாட்டறிக்கையும் கணக்கறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டன. அத்துடன் இந்நிகழ்வில் சட்டத்துறையில் கல்வி பயிலும் ஒரு மாணவிக்கான கல்வி ஊக்குவிப்புப் பணமும் நோயாளி ஒருவருக்கான வைத்திய உதவிப் பணமும் வழங்கப்பட்டன. சட்டத்தரணி அற்புதராஜா அவர்கள் பிரதம விருந்தினராகவும், யாழ். மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் வின்சென்டி போல் தேசிய சபைச் செயலாளர் சகோதரி பாலேந்திரா செறின் அவர்கள் கௌரவ விருந்தினராகவும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மத்திய சபை உறுப்பினர்கள், நிபந்களின் அங்கத்தவர்களென 450ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# குருமட மாணவர்களின் கல்வியாண்டு அங்குரார்ப்பண நிகழ்வு



யாழ். கொழும்புத்துறை புனித சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியின் 2026,27ஆம் கல்வியாண்டு அங்குரார்ப்பண நிகழ்வு கடந்த 01 ஆம் திகதி நடைபெற்றது. கல்லூரி அதிபர் அருட்தந்தை பெற்றூாஸ் தயாபரன் அவர்களின் ஒழுங்கு படுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் யாழ். மறை மாவட்ட ஆயர் பேரருட்தந்தை அன்ரன் ரஞ்சித் அவர்கள் கலந்து திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

திருப்பலியைத் தொடர்ந்து கல்லூரியின் அருட்தந்தை ஜோய் கிறிசோஸ்தம் கேட்போர் கூடத்தில் அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் கடந்த கல்வியாண்டில் சிறப்புச் சித்திபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கல், கல்வியாண்டுக் கால நாட்காட்டி அட்டவணை வெளியீடு, குருத்துவக் கல்லூரி மற்றும் புனித சவேரியார் இறையியல் நிறுவனத்தின் கடந்தாண்டு அறிக்கைகள் சமர்ப்பிப்பு, புதிய கல்வியாண்டிற்கான ஆரம்ப விரிவுரை என்பன இடம்பெற்றன.

ஆரம்ப விரிவுரையை 'அடையாளம் மற்றும் மாண்பை மீட்டெடுக்கும் விடுதலைப் பணி – இலங்கைத் தமிழர்களின் விடுதலைப் போராட்டங்களில் பொருத்தங்கள்' என்னும் தலைப்பில் குருத்துவக் கல்லூரி அதிபர் அருட்தந்தை பெற்றூாஸ் தயாபரன் அவர்கள் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்களெனப் பலரும் கலந்துகொண்டனர்.

# குருத்துவக் கல்லூரி மாணவர்களின் பிரியாவிடை நிகழ்வு



யாழ்ப்பாணம் புனித மடுத்தீனார் சிறிய குருமடத்திலிருந்து களுத்துறை தஹம் செஹன திரு இருதய ஆண்டவர் இடைநிலைக் குருத்துவக் கல்லூரிக்கு செல்லும் மாணவர்களுக்கான பிரியாவிடை நிகழ்வு கடந்த 27ஆம் திகதி இடம்பெற்றது.

குருமட அதிபர் அருட்தந்தை செல்வரட்ணம் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் உரும்பிராய்ப் பங்குத்தந்தை அருட்தந்தை அகஸ்ரின் அவர்கள் திருப்பலியைத் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார். திருப்பலியைத் தொடர்ந்து கலைநிகழ்வுகள் இடம்பெற்றன. தொடர்ந்து, புனரமைக்கப்பட்ட சமையலறை, உணவுக் களஞ்சிய அறை மற்றும் குருமடப் பணியாளர் தங்குமிடம் ஆகியவற்றை மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் ஆசீர்வதித்துத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மறைமாவட்ட குருமுதல்வர் அருட்தந்தை மனுவேற்பிள்ளை டேவிட் அவர்கள் கலந்து சிறப்பித்ததுடன், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், குருமட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# தேசிய மறைக்கல்வி ஞாயிறு தின சிறப்பு நிகழ்வு-நாவாந்துறை



நாவாந்துறைப் பங்கில் முன்னெடுக்கப்பட்ட தேசிய மறைக்கல்வி ஞாயிறு தின சிறப்பு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை இயூஜின் பிரான்சிஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் நடைபெற்ற இந்நிகழ்வில் புனித நீக்கிலார் ஆலயத்தில் சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து ஆலய வளாகத்தில் மறைக்கல்வி மாணவர்களின் சந்தை நிகழ்வும் இடம்பெற்றது. அத்துடன் அன்றைய நாளைச் சிறப்பித்து அன்று மாலை நாவாந்துறை புனித மரியன்னை ஆலயத்தில் மாணவர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் யாழ். மறைமாவட்ட மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்தந்தை ஸ்கரன்ராஜ் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இந்நிகழ்வில் மறைக்கல்வி மாணவர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

# 150ஆவது ஆண்டு விழா




யாழ். புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் ஆரம்பிக்கப்பட்டதன் 150ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட முன்னாள் அதிபர், ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னாள் அதிபர், ஆசிரியர்களுக்கான கௌரவிப்பு, அனுபவப் பகிர்வு என்பவற்றுடன் கிரிக்கிஸ்தான் நாட்டில் நடைபெற்ற பளுதூக்கல் போட்டியில் கலந்து இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்ற மாணவி செல்வி எனிற் ரோஸ் மற்றும் பயிற்று சிவிப்பாளர் திரு வினோத்குமார் ஆகியோ ருக்கான கௌரவிப்பும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் முன்னாள் ஓய்வு நிலை அதிபர்கள், பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், பணியாளர்களென 60க்கும் அதிகமா னவர்கள் கலந்துகொண்டனர்.

# அன்னை வேளாங்கண்ணி ஆலயத் திருவிழா




தாளையடி கடற்கரை அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயத் திருவிழாவானது எமது பங்குத்தந்தை அருட்பணி ஆதர் யஸ்ரின் அடிகளார் அவர்களின் வழிகாட்டுதலில் கடந்த 4ஆம் திகதி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. திருவிழாத் திருப்பலியை அருட்தந்தை ஞானேந்திரன் மற்றும் எமது பங்குத்தந்தை ஆகியோர் இணைந்து நிறைவேற்றினர். மேலும் திருவிழாவிலே ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வும் இடம்பெற்றது. திருவிழா நிறைவிலே அன்னை வேளாங்கண்ணி மாதாவின் இறுதி ஆசீர்வாத திருச்சுருபமானது புதிதாக மரத்தினால் வடிவமைக்கப்பட்டு ஆசீர்வாதம் வழங்கப்பட்டது. மிக நீண்ட வருடங்களின் பின்னர் அன்னையின் திருச்சுருபமானது புதிதாக மரத்தினால் வடிவமைக்கப்பட்டு எமது பங்குத்தந்தை அருட்பணி ஆதர் யஸ்ரின் அடிகளார் அவர்களினால் இறுதி ஆசீர்வாதம் வழங்கப்பட்டது.

# தேசிய மறைக்கல்வி ஞாயிறு தின சிறப்பு நிகழ்வு – சில்லாலை




சில்லாலைப் பங்கு மறைக்கல்வி ஞாயிறு தின சிறப்பு நிகழ்வு கடந்த 27ஆம் திகதி சில்லாலை புனித கதிரை அன்னை ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஆனந்தகுமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இந்நிகழ்வு இடம்பெற்றது. அன்றைய தினம் மாலை மாணவர்களுக்கான விளையாட்டுக்களும் கலைநிகழ்வுகளும் நடைபெற்றன.

# உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெறவுள்ள மாணவர்களின் கண்காட்சி



மணற்காடு பங்கில் உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பெறவுள்ள மாணவர்கள் இணைந்து முன்னெடுத்த கண்காட்சி கடந்த 27ஆம் திகதி புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. பங்குத்தந்தை அருட்தந்தை ஜோண் குரூஸ் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாணவர்களால் தூய ஆவியார், உறுதிப்பூசுதல் அருட்சாதனம் பற்றிய அறிமுகமும் தூய ஆவியார் பற்றிய இறைவார்த்தைகளும் காட்சிப்படுத்தப்பட்டன. இக்கண்காட்சியில் 85 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

# புனித வியாகுல அன்னை வருடாந்தத் திருவிழா



வெற்றிலைக்கேணி புனித வியாகுல அன்னை சிற்றாலய வருடாந்தத் திருவிழா பங்குத்தந்தை அருட்தந்தை விமலசேகரன் வசந்தன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. 25ஆம் திகதி கொடியேற்றத்துடன் வழிபாடுகள் ஆரம்பமாகி 26ஆம் திகதி நற்கருணை விழா இடம் பெற்றது. திருவிழாத் திருப்பலியை அமலமரித்தியாகிகள் சபை அருட்தந்தை ஜெசிங்டன் லோகு அவர்களும் நற்கருணைவிழாத் திருப்பலியை பங்குத்தந்தை அவர்களும் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தனர்.

இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் இல. 360, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2026ம் ஆண்டு ஐப்பசி மாதம் 04ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.